ஸ்ரீ

திவ்யகவி

பிள்ளைப்பெருமாளையங்கார்

அருளிச்செய்த

திருநறையூர்நம்பி

# மேகவிடுதூது

பண்டிதர்:

**P. R.** கிருஷ்ணமாசாரியரால்

பதிப்பிக்கப்பட்டது.

தஞ்சை:

கல்யாணசுந்தரம் பவர் பிரஸ்.

1907.

*Copyright, Registered.*

CD 429

# காப்பு.

## நம்மாழ்வார்.

நாரணனை யெவ்வுயிர்க்கு நாயகனை யண்டாண்ட
பூரணனை நாகணையிற் புண்ணியனை—வாரணமுன்
வந்தானை யேதி மறையா யிரந்தமிழாற்
றந்தானை நெஞ்சே தரி.

## திருமங்கை யாழ்வார்.

நாட்டியசீர்த் தென்னரையூர் நம்பி திருவடிக்கே
சூட்டியதோர் மேகவிடு தூதுக்குக்—கூட்டம்
பொலியன்ப ரேத்தும் புனலாலி நாடன்
கலியன் பரகாலன் காப்பு.

# மேகவிடு தூது.

1 சீர்கொண்ட செங்கமலச் செல்வத் திருமகளு
நீர்கொண்ட வேலை நிலமகளு—மேர்கொண்ட

2 காந்தண மணிக்கடகக் கையா லடிவருடப்
பாந்தண் மணிச்சுடிகைப் பாயன்மேற்-சேர்ந்துறங்குஞ்

3 செங்கணமா லுந்தித் திருத்தா மரைப்பிறந்த
வங்கணமா ஞாலத் தனைத்துயிர்க்குந்—தங்காமும்

4 மாரி வழங்குதன் மாறுமே கைம்மாறு
காரிய மென்று கருதாமே—பாரிற்

5 றுளிக்கின்ற தண்ணந் துளியமுத நல்கி
யளிக்கின்ற கொண்மூ வரசே—களிக்கின்ற

6 மேலுலக மேறி விரிஞ்சனு மம்படைத்து
நாலு திசைமுகமு நண்ணுதலான்—மாலுமாய்

7 நீல நிறமாகி நிறைகமலக் கண்ணாகிக்
கோல வளையாழி கொள்கையாற்—சூலம்

8 விரவிய பாணியாய் மின்னையிடந் தாங்கி
யரவ மணியு மழகால்—வரமளிக்கு

9 மெத்தே வருக்கு மிறைவராய் மேலாய்
முத்தே வருநிகரா மூர்த்தியே—மைத்தகன்ற

10 வானத்து ளேபிறந்து வானத்து ளேதவழ்ந்து
வானத்து ளேவளரும் வானமே—வானத்து

11 வேலைவாய் நீருந்தி வெற்பி லரசிருந்து
சோலைவாய்க் கணபடுக்குந் தோன்றலே—ஞாலமிசைத்

12 தானமு மெய்யுந் தருமமுங் கல்வியு
மானமுந் தானமு மாதவமு—நானக்

13 கருங்கொண்டை மங்கையர்தங் கற்புநிலை நிற்ப [குமுவ
தருங்கொண்ட லேயுனைக்கொண் டன்றோ—நெருங்

14 ராழிநீர் துய்ய வமுதநீ ரானதுவும்
வாழிநீ யுண்ட வளமன்றோ—தாழுமடி

15 யாவுஞ்சிந் தாமணியு மம்புயமுஞ் சங்கமுங்
காவும் பணியவுயர் கார்வேந்தே—நாவினுற்

16 சாதகமுந் தோகைத் தனிமயிலும் போலவே
மேதகைய நின்வரவை வேட்டிருந்தேன்—பூதலத்துப்

17 பல்லுயிருங் காக்கப் பரமா முனக்கெனது
புல்லுயிருங் காக்கிற் புகழன்றோ—வல்லதொரு

18 சீருயிரு மேகமே செங்கண்மாற் காளானே
னாருயிரு மேகமே யல்லவோ—பேரரவ

19 நீலமஞ்சே கேட்டியா னின்னையல்லா தென்னையிந்தக்
காலமஞ்சே லென்பாரைக் காண்கிலே—னோலமரு

20 விண்மாரி யேபெருமான் வேரித் துழாய்வேட்டுக்
கண்மாரி பெய்வதெல்லாங் கண்டாயே—தண்மை

21 விளையும் பயோதரமே வெம்பாத செம்பொ
னளையும் பயோதரமே யானேன்—கிளைபிரியாக்

22 கோல மழையே குயில்மா ரனையந்திக்
கால மழையாமே காப்பாரார்—நீலநிற

23 மங்குலுக்கு வேந்தே மலர்க்கண் புதைத்தனைய
கங்குலுக்கு நெஞ்சங் கரைகின்றே—னிங்கு

24 நடந்தகன மேமுலையி னாலுந் தரள
வடந்தகன மேசெய்து மாய்த்தேன்—விடந்திரண்ட

25 திங்க ளெழிலிக்குச் சிலைமார வேண்முனியி
லெங்களெழி லிக்கரசே யென்செய்வேன்—மங்கலமா

26 மிந்திரவில் வாங்கி யெழுகின்ற மைப்புயலே
வந்திரவில் வாடை வருத்துங்கா—ணந்தரத்து

27 விண்ணே யுனக்கிவற்றை விண்டுரைத்தே னல்லாதெ
னுண்ணேய வேட்கையெவர்க் கோதுவேன்—கண்ணழ
[லால்

28 வெந்தா னிலத்துக்கும் வீறுகத் தாங்குகையான்
மந்தா னிலத்துக்கு வாய்திறவே—னந்தக்

29 குருத்தத்தை மாரன் குரகதமா மென்றே
வருத்தத்தை யங்குரைக்க மாட்டேன்—கருத்துற்ற

30 மாதண் டலைவாய் மதுகரத்துக் கும்மவன்றன்
கோதண்ட நாணென்று கூறேனான்—மூதண்ட

31 கோளக் குயிற்கெல்லாங் கோவே யவன்றனது
காளக் குயிற்குங் கழறேனா—னாளொன்றி

32 லன்புரு தேயன் றரசனுட லீர்வித்த
புன்புரு வுக்கும் புகன்றிடேன்—மென்புறத்துக்

33 கோம்பிக் குடல்பளிக்குங் கொச்சைமட மஞ்ஞைக்குஞ்
சோம்பித் தளருந் துயர்பணியேன்—றேம்பிரச

34 நிற்கின்ற பூவைக்கு நீள்குழலார் சொல்லியதே
கற்கின்ற பூவைக்குங் கட்டுரையேன்—பொற்கால்

35 வெறிப்பதும வீட்டன்னம் வெண்பாலு நீரும்
பிறிப்பதுபோ னட்புப் பிறிக்குங்—குறிப்பறிந்து

36 காதலா லுள்ளக் கவலை யதுகேட்க
வோதலா காதென் றுரையாடே—னாதலா

37 லுள்ளே புழுங்குவ தன்றி யொருவர்க்கும்
விள்ளே னுனக்கு விளம்பினேன்—றெள்ளியநூ

38 லோதுவா ரெல்லா முதவுவார்க் கொப்புரைக்க
வேதுவாய் நின்ற வெழிலியே—பூதலத்துப்

39 பெய்யுதவி யும்புரிந்தாற் பேச்சுதவி யுஞ்சிறிது
மெய்யுதவி யும்புரிய வேண்டாவோ—துய்ய

40 வடலாழி யானடிக்கே யன்பாகிக் காதற்
கடலாழி மூழ்கினேன் கண்டா—யுடல்வாடி

41 விம்முகிலே சந்தாக மீளத் திருமால்பான்
மைம்முகிலே சந்தாக மாட்டாயோ—பெய்மதவேள்

42 தண்ணப்பஞ் செய்வதெல்லாந்தாமோதரனடிக்கீழ்[தின்
விண்ணப்பஞ் செய்தருள வேண்டாவோ—வெண்ணத்

43 சீதரனை நீயிரந்து தெய்வத் துழாய்கொணர்ந்தே
னாதரவு தீர்த்தருள லாகாதோ—கேதகைக்கு

44 மின்கேள்வ னாக்கிய நீ விண்ணோர் பெருமானை
யென்கேள்வ னாக்கினா லேராதோ—முன்கேட்டு

45 மெள்ளரிய தாம மெனக்குதவா யேலுனக்கு
வள்ளலெனு நாமம் வழுவாதோ—தெள்ளுகடல்

46 ஞாலத் துளவமே நல்விளமை போகாமற்
கோலத் துளவமே கொண்டுதவாய்—சீலத்தா

47 லூனா யுடலா யுறுதுணையாய்த் தெய்வமாய்
யானா மருந்தாயென் னாருயிரா—யானாதை

48 நெஞ்சமாய்க் கண்ணாய் நினைவாய் வினையேற்குத்
தஞ்சமாய் நின்ற தனிமுதலே—பஞ்சவர்க்காய்

49 மெய்த்தூது சென்றவரை வெல்லவே வெண்சங்கம்
வைத்தூது செங்கமல மாயோன்பா—லித்தூது

50 நல்லதெனக் காரே நடந்தருள வேண்டுநீ
யல்லதெனக் காரே யருள்செய்வார்—சொல்லித்

51 தருதுமெனக் கந்தரமே சாற்றாயே யுய்யக்
கருதுமெனக் கந்தரமே கண்டாய்—பெரிது

52 மெனைத்தோன்றி யோதுயர மெய்தினார் பார்மே
லுனைத்தோன்றி யோதா துழன்றார்—நினைத்தோர்

53 தம்து பிறப்பறுக்குந் தாயாகி மேனா
ளமுதிற் பிறந்தாள்பா லன்றோ— நமது

54 கருமஞ் சினையவர்காய்க் காய்கதிரைப் பாய்ந்து
பொருமஞ் சினைசிறுவன் போனான்—றரணிதனின்

55 மீது பரவை விடமுண் டவனன்றோ
மாது பரவை மனைவந்தா—னோதலா

56 லோது மிவரி லுயர்ந்தோ ரிலையென்றே
தூது புரிந்தோரைத் தொகுத்துரைத்தே—னோதலாற்

57 றேனின் புறத்தாதுந் தெய்வத் துளவினால்
யானின் புறத்தா தெழுந்தருளாய்—வானிற்

58 றிவலை யிலிற்றிவருந் தெய்வமே நீயென்
கவலையறத் தூதுபோங் காலைக்—குவலயத்தி

59 லெம்பிரா னாரு மவர்பேரு மெற்பயின்ற
தம்பிரான் செய்தமையுஞ் சாற்றக்கே—ளம்பரிற்

60 பன்னிருவர் மான்றேர்ப் பரிதிக் கடவுளரு
மன்னிருவர் தெய்வ மருத்துவரு—மொன்னலரைப்

61 பாயும் விடையர் பதினொருவ ருந்திசையிற்
காயுங் கடாயானைக் காவலருந்—தூயகதிர்

62 வெண்ணிலா விட்டு விளங்குகலா மதியு
மெண்ணிலாத் தாரகையி னீட்டமுங்—கண்ணி

63 லருடரு ஞானத் தருந்தவர் நாகர்
தெருடரு விஞ்சையர் சித்தர்—கருட

64 ராக்க ரியக்க ரவுணர் முதலோர்
பீரக்குங் கணங்கள் பலரும்—பெருக்கரு

65 நீரேழு மேழு வினைது பெருங்கணமும்
பாரேழு மேழு பருப்பதமு—மீரே

66 ழடுக்கும் புவனமு மாடகமால் வெற்பு
மெடுக்கு மரவரசு மெல்லாந்—தொடுக்கித்தான்

67 முண்டக நாபி முளைக்குஞ் சதுமுகனோ
டண்ட வளாக மடங்கலுங்கண்—கண்டளித்து

68 முன்னிய வண்ண முடித்து விளையாடுந்
தன்னிகரில் லாத தனிமுதல்வ—னன்னமாய்

69 மீனாகி யாமையாய் வெள்ளேன மாய்மடங்கன்
மானாகி மாயையால் வாமனமா—யானாத

70 மானிடராய்ப் பாய்பரியாய் வாழு மடியவர்க்குத்
தானிடராற் றப்புகுந்த தம்பிரான்—மேனாளிற்

71 பைநாகப் பள்ளிமேற் பங்கயங்கள் பூத்ததொரு
மைநாகம் போற்கண் வளருநாட்—பொன்னாய

72 வன்ன முளரி மலர்த்தவிசில் வீற்றிருக்கு
மன்ன முணர்த்தவுண ராமையா—லென்னையல்லா

73 லிந்தித் திரைமடந்தை யெய்தலுமா யிற்றோவென்
றுன்னித் திரைமடந்தை யூடினளா—யந்திலையே

74 காயத் திரியுங் கலைமகள்சா வித்திரியு
மாயத் தெரிவையரா யாங்குவர—நேயத்தாற்

75 கோலத்தாள் கைதொழுது கூரிலைவேன் முக்கவட்டுச்
சூலத்தா னேவற் றொழில்கேட்ப—ஞாலத்து

76 மானிட மங்கை வடிவாகி வந்துறையுங்
கானிடம் யாதென்று கண்சாத்தி—யானா

77 நலமாகும் யோசனையோர் நாற்றிசையு முத்தித்
தலமாஞ் சுகந்தவனந் தன்னு—ளலமாற

78 வான்றிகழுங் கங்கைமுதன் மங்கைமார் மார்கழியிற்
றோன்றியமுற் பக்கத் துவாதசியிற்—றேன்றிகழுங்

79 கூந்த லனையக் குடைந்தாட லானதிக்கு
வேந்தனென நாமம் விளம்பியே—பாய்ந்த

80 திருமணிமுத் தாறலைக்குந் தீரத்தி னின்ற
மருமருவும் வஞ்சியின்கீழ் வைக—வருக்காக

81 வானமே தாவி வளரு மகிழடியில்
ஞானமே தாவியெனு நன்முனிவன்—தானெய்திச்

82 செய்ய கமலத்துச் செய்யவளைக் கண்டுதந்தே
யையர் பயந்தெடுத்த வன்னையார்—துய்யபெய

83 ரூரே தெனப்பெயரு மூருமிலை தந்தைதாய்
நீரே யெனமுனிவ னெஞ்சுருகிப்—பாரேத்த

84 மன்னிள வஞ்சியின்கீழ் வந்துறைத லாற்பெயரு
மென்னிள வஞ்சியா ரென்றுரைத்துத்—தன்னுழையி

85 லான வரமுனிவ னவ்வனத்துக் கொண்டிருப்ப
வானவர் தோலா வலிதோற்றுத்—தானவரால்

86 விண்ணு டிழந்து விரிஞ்சனொடு கூப்பிடுநாட்
டண்ணார் துழாய்மா லிவனுணர்ந்து—நண்ணார்

87 மிடைகெடுத்து மென்று விடைகொடுத்த பின்னர்க்
கிடைகெடுத்தசெந் துவர்வாய்க்கிள்ளை—யடைகொடுத்த

88 புண்டரிக மாளிகைமேற் பூவை தணந்தமையு
மண்டரெலா மாற்ற லகன்றமையுங்—கண்டருளிச்

89 செந்திருவை நாடுவான் றெய்வ வடிவகற்றி
யைந்துருவ மாகி யவனிமேல்—வந்தருளி

90 நாட்டப் பறவை யரச னகல்விசும்புந்
தேடித் திசையனைத்துந் தேடியநா—ணீடு

91 சுகந்தவன நோக்கித் துணையாய செல்வி
யுகந்தவன மீதென் றுணர்ந்து—புகுந்தருள

92 மேதாவி கண்டு விருந்தளிப்ப வெவ்வுயிர்க்கு
மாதாவி னல்லான் மகிழ்ந்ததற்பின்—போதார்

93 முருகுவளை மொய்குழலை முன்றினிற் கண்டு
பெருகுவளை முன்கை பிடிப்பத்—திருமகளுங்

94 காதலால் வந்தநம்பி கைப்பிடித்தா னென்றலறிக்
கோதிலா மாமுனியைக் கூவுதலும்—வேதியனுங்

95 கண்புகையச் செய்ய கதிர்களுகக் கார்வேனில்
விண்புகைய வாய்துடிப்ப மெய்பதற—மண்புகைய

96 வந்தான் கரகநீர் வாங்கிச் சபிப்பதற்கு
முந்தாமுன் சங்காழி முன்காட்டச்—சிந்தை

97 மயங்கினா னஞ்சினான் வாய்குழறிப் பார்மேன்
முயங்கினான் செங்கை முகிழ்த்தான்—றியங்கி

98 யழுதான் றளவின்மா லஞ்சலென வானோர்
விழுதா மரைத்தாளில் வீழ்ந்து—முழுது

99 மறியாமை செய்தே னதுபொறுத்தி யென்ன
வெறியாழி யம்மா னிரங்கிச்—செறிதுழாய்க்

100 கோதை மணம்புணர்ந்த கொண்டலுமப் புண்டரீக
மாதை மணம்புணர்ந்து வைகியபி—னீதி

101 யறந்திறம்பா நேமியா னவ்வனஞ்சேர் கைக்கும்
பிறந்தார்கள் வீடு பெறற்குஞ்—சிறந்தமலர்

102 மாமாதின் பேரே வழங்குகைக்குங் கேட்டவர
மாமா தவனுக் கருளியபின்—பூமாதைப்

103 பாமாதுள் ளிட்டார் பணிந்தேத்தப் பாற்கடலிற்
றேமா மலரோன் செவிப்படுத்த—நாம

104 மறையாள னவ்வனத்து வந்தரசி னீழன்
முறையாய வேள்வி முடித்துப்—பொறையார்ந்த

105 பாதார விந்தம் பணிந்தேத்தப் பாற்கடலிற்
சீதார விந்தத் திருவினொடும்—பூதலத்தோர்

106 பேறுபெற வேபஞ்ச பேர வடிவுவந்து
வீறுபெற மாமுனிக்கும் வீடருளிக்—கூறரிய

107 ஞாலத் தெழுபத்து நான்கு சதுரயுகம்
நீலத் தடவரைபோ னின்றபிரான்—மேலைச்

108 சிகரக் குடகிரியிற் சென்றிழிந்து கீழை
மகரக் கடல்வயிறு மட்டு—மகலிடத்தின்

109 பாரங் கிழித்துப் பரவி மதகிடறி
யாரஞ் சுருட்டி யகிலுருட்டி—நார

110 நிரையெறிந்து வித்துருமக் கொத்து நுடங்கித்
திரையெறிந்து முத்துஞ் சிதறிக்—கரையிற்

111 கொழிக்குங்கா வேரி குதித்தோடப் பாய்ந்து
சுழிக்குங்கா வேரித் துறையா—னெழிற்கருகி

112 யோங்கிப் பகலிருளை யுண்டாக்கி யேசுரும்பைத்
தாங்கிப் புயறடுத்த தண்டலையுந்—தேஙகமலப்

113 பூமிசை யன்னம் பொருந்தி வலம்புரியு
நேமியு மேந்திய நீள்கயமுங்—காம

114 ருளமகிழ வெண்ணிலா வொண்கதிரைக் கன்னல்
வளம்தனை யீன்ற வயலு—மளவின்றித்

115 தன்னையே போலத் தழைப்பத் தரணிக்கோ
ரன்னையே போல வருள்செய்வா—ன்மன்னு

116 மருநறையூர் வீதி மணிமாடக் கோயிற்
றிருநறையூர் வாழ்வாசு தேவ—னிரணியனைப்

117 பாரி லுரங்கிழித்த பன்னகத்தான் பன்னகத்தான்
வாரிநிகர் வண்ணத்தான் வண்ணத்தா—னூரிடத்துந்

118 தண்ணளியான் றண்ணளியான்சூழ்ந்தவனசக்கரத்தான்
கண்ணழகார்முகத்தான்கார்முகத்தான்—விண்ணுலகி

119 னல்லசுரர்க் கண்ணியா னறுதுழாய்க் கண்ணியான்
புல்லசுரர்க் குக்கொடியான் புட்கொடியான்—றொல்லி
[லங்கை

120 வஞ்சகனை யங்கறுத்தான் வாய்ந்தவடி வங்கறுத்தான்
கஞ்சனைமுன் கண்சிவந்தான் கால்சிவந்தான்—றஞ்சந்

121 திரையான் மலரிந் திரையான் கவிகை
வரையான் செழுந்து வரையான்—றரையான

122 மங்கையான் வேதநிய மங்கையான் சென்னியிலோர்
கங்கையான் சூடியகாற் கங்கையான்—புங்கயக்கை

123 யாரணன் கேசவ னாழியா னச்சுதன்
காரண னெம்பெருமான் காகுத்த—னாரணன்

124 யாதவன் கண்ண னிருடிகே சன்முகுந்தன்
மாதவன் கோவிந்தன் வைகுந்தன்—சீதரன்

125 மாய னனந்தன் மதுசூ தனன்றிருமா
லாயன் முராரி யருளாளன்—றூயகழற்

126 றேவாதி தேவன் றிருநா யகத்தேவன்
மூவா விடர்கெடுத்த தம்பிரா—னோவாய்ப்

127 படர்ந்திகழு மாடரவப் பாய்க்கிடந்து மேலா
மிடந்திகழ்வை குந்தத் திருந்து—நடந்து

128 பொறையூ ரடிக்கமலம் பூத்தோய வந்து
நறையூரு ணின்றருளு நம்பி—மறையூரு

129 மாயிரம் பேழ்வா யனந்தன் பணாடவிமேன்
மாயிரு ஞால மகிழ்ந்திறைஞ்சச்—சேயிருந்தா

130 ரண்டர் குழாமு மருந்தவ ரீட்டமுந்
தொண்டர் குழாமுந் தொழுதேத்தப்—பண்டைத்

131 திருவாய் மொழியுந் திருமொழியும் வேதாத்
தருவாய் மொழியுந் தழைப்ப—வொருவாத

132 திங்களு நாளுந் திருவிழா நின்றோங்க
மங்கல வெண்சங்கம் வாய்பிளிற—வங்கமர்ந்து

133 நன்பஞ்சேர் நாடகக்கா ணம்பிக்கு நாயகித
னின்பஞ்சேர் நாளி லினிதொருநா—ளன்பமர்ந்து

134 தன்னிசையாற் புள்வேந்தன் சாமவே தம்பாடு
மின்னிசையாற் பள்ளி யெழுந்தருளி—மன்னிச்

135 சிலம்பு திரைமோதுந் திருமணிமுத் தாற்றி
னலம்புதிரு மஞ்சனநீ ராடி—நலம்பரவு

136 சேலை களைந்தணிந்து தெய்வப் பசுந்துளப
மாலை புதிய வகைசூடிக்—கோலந்

137 தயங்குதிரு வாரா தனைகொண்ட பின்ன
ரியங்குகடற் சங்க மிசைப்பப்—பெயர்ந்தோர்

138 திருந்துமணி மண்டபத்துச் சிங்கஞ் சுமந்த
வருந்தவிசி னேறி யருளிப்—பொருந்தியநால்

139 வேதமும் வேதாந்த மெய்த்திரு வாய்மொழியு
நாதமுங் கேட்டு நயந்துருகி—யோது

140 மருணை வடவரையி னம்பொற் குவட்டிற்
றருண மவுலி தயங்கத்—திருநாம

141 மிட்ட வதனத் தெழுதியகத் தூரி
வட்ட மதியின் மறுவேய்ப்பக்—கிட்டரிய

142 தேங்குழைக்கீழ்க்கற்பகத்திற்செம்பாம்புசூழ்ந்ததெனப்
பூங்குழைக்கீழ் வாகு புரிதயங்க—வாங்கிப்

143 பதிக்குங் கவுத்துவமு மார்பும் பரிதி
யுதிக்கு மரகதக்குன் றொப்பக்—குதித்தொருநாட்

144 கால்வீழ்ந்த கங்கை விலங்கிக் கடிமார்பின்
மேல்வீழ்ந்த தென்னமுந்நூல் விட்டிலங்கச்—சூல்வீங்கு

145 கொண்டலின்கீழ்த்தோன்றுங் குடதிசையிற்செக்கரென
விண்டிலங்கு பொன்னுடை மெய்யசையத்—தொண்ட
[ரெலாம்

146 பற்றிக் கழல்விடாப் பாதார விந்தத்தின்
வெற்றிக் கழலின் வெயிலெறிப்ப—மற்றுந்தான்

147 வேண்டும் பலகலனு மேகவடி விற்கேற்பப்
பூண்டு களபம் புயத்தணிந்து—நீண்டகடற்

148 பெண்ணு டியதன் பெரிய திருவடிகைக்
கண்ணாடி மண்டலத்திற் கண்சார்த்தி—வண்ணத்

149 திருமருங்குக் கேற்றதொரு சிற்றுடைவாள் வீக்கி
யிருமருங்கு மைம்படையு மேந்தித்—திருமறுகிற்

150 போதரலு நற்கடல்சூழ் பூதலத்தும் வானத்து
மாத ரரம்பையர்கள் வந்தீண்டிப்—பாதந்

151 தொழுவார் வளைகலைநாண் சோர்வார் மயலா
யழுவார் முலைபசலை யாவார்—குழுவாகி

152 யம்மாதர் நிற்ப வருவினையேன் கைதொழுதேன்
விம்மா வெதும்பா மெலிவானே—னெம்மானுக்

153 கென்னெஞ்ச மென்கலையு மென்னாணுஞ் சங்குமவன்
றன்னெஞ் சறியத் தனிதோற்றேன்—பின்னுமொரு

154 விண்ணப்ப முண்டென்று மெய்நடுங்கிக் கைகூப்பி[லாம்
வண்ணத் துகிலொதுக்கி வாய்புதைத்துக்—கண்ணுத்

155 வீரன் சிலையிறுத்த வேந்தே வினைவிளைக்கு
மாரன் சிலையிறுக்க வாராதோ—பாரமலை

156 யன்றெடுத்த கையா லழல்வீ சியதென்றற்
குன்றெடுத்த போது குறையாமோ—நின்றெறிக்குஞ்

157 செய்ய கதிர்மறைத்த சீராழி யான்முதியின்
வெய்ய கதிர்மறைக்க வேண்டாவோ—கையமைந்து

158 முன்னநீ வாயடக்கு முந்நீரை யென்பொருட்டா
லின்னநீ வாயடக்கி லேராதோ—பன்னகத்தின்

159 பூமரமேழுந் துளைத்த போர்வாளி புன்குயில்வாழ்
மாமரமொன் றுந்துளைக்க வாராதோ—சேமலைந்து

160 மாவாய் பிளந்த மரகதமே வம்புரைப்பார்
நாவாய் பிளந்தா னகையரோ—பூவாய்

161 தூய குருந்தொசித்த தோளாய் செவிவெதுப்பு
மாயர் குழலொசித்தா லாகாதோ—மாயமாய்க்

162 காதிச் சுழல்காற்றைக் காய்ந்தநீ வாடையாய்
வாதிச் சுழல்காற்றை மாற்றாயோ—மோதிவரும்

163 மண்ணாறு நீங்க வழிகண்ட நீயெனது
கண்ணாறு நீங்கவழி காட்டாயோ—தண்ணார்ந்த

164 தாதுதிரும் பைந்துழாய் தாராயேற் கண்ணனென
வோதுதிரு நாமமா சுண்ணாதோ—வீதிருக்க

165 நீநெடுமோ லானக்கா னின்சே வடிதொழுது
னானெடுமோ லாகவோ நம்பியே—மானிலத்துப்

166 பாவையர்கைச் சங்கம் பறிப்பதற்கு நின்சங்கந்
தீவகமேர் நேமித் திருமாலே—மேவத்

167 திருக்கடைக்கண் சார்த்தாய் திருவாய் மலரா
யருட்கடலே யென்னு மளவின்—மருக்கமலை

168 நாதன் சிறிதே நகைகோட்டி வெண்கோட்டு
மாதங்க மீதே மறைந்ததாற்—சீதரன்றன்

169 வையம் புதைக்கு மலர்கருதி மாரவே
ளெய்யம் புதைக்கு மிலக்கானேன்—செய்யநிறப்

170 பீதகவா டைக்கும் பெரிய திருவரைக்கும்
பாதகவா டைக்கும் பரிவானே—னுதலா

171 லந்திக் கமல னணையுங்கொ லென்றிருந்தே
னுந்திக் கமலத் துளமானேன்—கொந்துற்ற

172 கொய்துழாய் மார்பகலங் கூடுங்கொ லோவெனவே
கைதுழாய் மண்சழித்துக் கைசோர்ந்தே—னெய்தி

173 யயனாலுங் காண வரியான் கரிய
புயனாலுங் காணமால் பூண்டேன்—வயமாரன்

174 றூதை திருப்பவளந் தான்வேட் டிளந்தென்ற
லூதை திருப்பவள மொல்கினேன்—மாதுவரை

175 யாயன் பவனிதொழு தன்றுமுத லின்றளவுந்
தூய நயனந் துயினீங்கி—யீர்யொறுக்கப்

176 பந்து கழன்மறந்து பாவை கிளிதுறந்து
சந்து பனிநீர் தனத்தகற்றி—வெந்துயராய்ப்

177 போதக் கலனிழந்து பூவிழந்து நீரிழந்து
காதற் சிறையிருத்தல் கண்டாயே—மாதுளபத்

178 தாரானை |வேட்கையெல்லாந் தந்தானை மும்மதமும்
வாரானை யன்றழைக்க வந்தானைக்—காரான

179 மெய்யானை யன்பருக்கு மெய்த்தானைக் கண்கைகால்
செய்யானை வேலையணை செய்தானை—வையமெல்லாம்

180 பெற்றானைக் காணப் பெறாதானைக் கன்மழைக்காக்
கற்றானைக் காத்ததொரு கல்லானை—யற்றார்க்கு

181 வாய்ந்தானைச் செம்பவள வாயானை மாமடியப்
பாய்ந்தானை யாடரவப் பாயானைப்—பைந்துளப

182 மாமாலைக் கண்டந்த மாலைவரு முன்னமே
தேமாலை வாங்கநீ செல்லுங்காற்—பூமாயன்

183 முன்னந் தடுத்த முளரித் திருக்கரத்தா
லின்னந் தடுக்குமென வெண்ணாதே—நின்னுடைய

184 நீமுழக்க மிக்கதெனச் செங்கண்மால் கைச்சங்கின்
வாய்முழக்கங் கேட்டு மயங்காதே—நீமருவும்

185 வானச் சிலையின் வனப்புளதென் றெம்பெருமான்
கூனற் சிலைகண்டு கூசாதே—மேனிலத்து

186 மின்சோதி யெல்லாம் விழுங்குமென்று நாந்தகத்தி
னன்சோதி கண்டுமிக நாணாதே—நின்சோதி

187 மையழகி னீல மணியழகி னெம்மான்றன்
மெய்யழகு நன்றென்று வெள்காதே—துய்யமணி

188 யாரக் கபாட மணிக்கோயில் வாசலெல்லாஞ்
சேரக் கடந்து திருமுன்போய்த்—தூரத்தி

189 னின்று வணங்கி நெடிதேத்தி வாய்புதைத்துச்
சென்று பெருமான் றிருச்செவியிற்—றுன்றுகடற்

190 றையற் கரைசேரின் றூர்வேட் டொருபேதை
மையற் கரைசேரு மாறறியாண்—மெய்யுருகிக்

191 கொம்பனையா ளோர்விரகங் கொண்டா ளதுதன்னை
யெம்பெருமான் கேட்டருளா யேதென்னி—லம்பரமு

192 மட்புலனு முண்டுமிழ்ந்த மாயோ னுருவமல்லாற்
கட்புலனும் வேற்றுருவங் காணற்க—புட்புறத்து

193 மூர்த்தி புகழே முகப்பதல்லான் மற்றொருவர்
கீர்த்தி செவிமடுத்துக் கேளற்க—நீர்த்தரங்கப்

194 பூவெடுத்த வெண்கோட்டுப் புண்ணியனை யல்லாதென்
னாவெடுத்து வேறு நவிலற்க—கோவெடுத்த

195 கங்கை யுலவுங் கழலினுக் கல்லாதென்
செங்கை தலைமிசைபோய்ச் சேரற்க—பங்கயத்தா

196 டாக்குந் திருத்துழாய்த் தாமமண மல்லாதென்
மூக்கும் பிறிதுமண மோவற்க—மாக்கடல்போ

197 லஞ்சன வண்ண னடிக்கமல மல்லாதென்
னெஞ்சமு மொன்றை நினையற்க—செஞ்சுணங்கோ

198 டிங்கெழுந்த கொங்கை யெழுபிறப்பு மெம்பெருமான்
கொங்கணைந்த தோளல்லாற் கூடற்க—மங்கைநல்லீ

199 ரென்று வருந்தி யிருந்தா ளவளுக்குன்
மன்றல் கமழ்தார் வழங்கென்று—நின்றிரந்து

200 பண்டுளவத் தாமரையாள் பற்றுந் திருமார்பின்
வண்டுளவத் தார்வாங்கி வா.



V. B, SUBRAHMANIYASARMA
TAM[illegible]AND